# ஒரு வருடத்தில் வேதாகமம் முழுவதும்

*நீங்கள் எப்போதாவது, ஒரு வருடத்திற்குள் வேதாகமம் முழுவதையும் வாசித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தது உண்டா? நீங்கள் எப்போதாவது, "வேதாகமத்தை இந்த வருடத்திற்குள் மும்முரமாகப் படித்துவிட வேண்டியது எனக்கு அவசியமாக உள்ளது" என்று கூறிக்கொண்டது உண்டா? நம்மில் பலர், நாம் செய்யத்தேவையானது என்ன என்று அறிந்திருக்கின்றோம், ஆனால் வேதாகம வாசிப்பு மற்றும் வேதாகமப் படிப்பிற்கென்று நம்மை ஒழுங்குபடுத்திக்கொள்வது என்பது கடினமாயிருக்கிறது.*

*அடுத்த பன்னிரெண்டு மாதங்களுக்கு, ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும், வேதாகமம் முழுவதையும் விசேஷமாகப் படித்தல் என்ற விஷயத்தில் ஈடுபடும்படி உங்களுக்கு நான் அறைகூவல் விடுக்கின்றேன். இந்தப் பாடங்கள் அறுபத்தியாறு புத்தகங்களையும் பற்றிய மேல்கண்ணோட்டத்தை அளிக்கின்றன. நீங்கள் உங்களை இந்தப் பாடத்திற்கு ஒப்புக்கொடுத்தால், இது உங்களுக்கு தேவனுடைய வசனத்தைப் பற்றி, நீங்கள் முன் எப்போதும் கொண்டிராத ஒரு உட்கண்ணோட்டத்தைத் தரமுடியும்.*

*தனிப்பட்ட ஆதாயம் மற்றும் தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி ஆகியவற்றிற்கு தனிப்பட்ட ஈடுபாடு என்பதே திறவுகோலாக உள்ளது. படிக்கப்பட்டிருத்தலுக்கு நீங்கள் ஒவ்வொரு புத்தகத்தில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளை வாசிக்க வேண்டும். நீங்கள் இந்த அதிகாரங்களைப் படித்து இவற்றின்மீது தியானம் செய்தால், ஒவ்வொரு பாடமும் உங்களுக்கு மிக அதிகமாக அர்த்தப்படும்.*

*ஆலோசனையாகத் தரப்பட்டுள்ள வாசிப்பு அட்டவணையில், ஒரு நாளில் வாசிப்பதற்கென்று மூன்று அல்லது நான்கு அதிகாரங்கள் வரையறைப்படுத்தப்பட்டுள்ளன. இது உங்களுக்கு ஒவ்வொரு புத்தகத்தைப் பற்றியும் நல்லதொரு மாதிரியைக் கொடுக்கும், ஆனால் இது பல அதிகாரங்களை வாசிக்கப்படாது விட்டுவைப்பதாகவும் இருக்கும். நீங்கள் தாண்டிச்சென்ற அதிகாரங்களுக்குப் பிற்பாடு திரும்ப வந்து அவை யாவற்றையும் வாசிக்க வேண்டும். வேதாகமம் முழுவதையும் வாசித்து முடித்தலில் பெரிய அளவு மனதிருப்தியும் மதிப்பும் உள்ளது.*

*முழு வேதாகமத்திலும் நன்கு பழக்கப்படுதல் ஆவதின் மதிப்பு 2 தீமோத்தேயு 3:16, 17ல் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது: "வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது." "வேதவாக்கியங்களெல்லாம்" என்ற சொற்றொடர், புதிய ஏற்பாடு வேதவசனத்தை உள்ளடக்குகிறது (2 பேதுரு 3:15, 16), ஆனால் சந்தர்ப்பப்பொருளானது குறிப்பாகப் பழைய ஏற்பாட்டு வசனங்களைப் பற்றிப் பேசுகிறது (2 தீமோத்தேயு 3:14, 15ஐக் காணவும்). வேதாகமத்தில் இருந்து முழு பயனைப் பெறுவதற்கு, நாம் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் நன்கு பழக்கமாவதென்பது அவசியமாக உள்ளது.*

*இது நாம் இன்றைய நாட்களில் பழைய ஏற்பாட்டின் கீழ் இருக்கின்றோம் என்று அர்த்தப்படுவது இல்லை. "ஏற்பாடு" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "உடன்படிக்கை" அல்லது "ஒப்பந்தம்" என்று அர்த்தப்படுகிறது. பழைய ஏற்பாடு என்பது தேவனுக்கும் யூத மக்களுக்கும் இடையிலான ஒரு உடன்படிக்கையாய் இருந்தது. அது ஒரு தற்காலிக மான உடன்படிக்கையாய் இருந்தது (எரேமியா 31:31-34; எபிரெயர் 8:8-12). கிறிஸ்து, "அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து" நீக்கிப்போட்டார் என்று பவுல் கூறினார் (கொலோசெயர் 2:14). இயேசுவின் புதிய ஏற்பாடு (மத்தேயு 26:28) கர்த்தருக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான ஒரு உடன்படிக்கையாய் இருக்கிறது. இது இயேசு சிலுவையில் மரித்தபோது அமுலுக்கு வந்தது (எபிரெயர் 9:16, 17).*

*பழைய ஏற்பாட்டைப் படித்தல் என்பது இன்னமும் மதிப்புள்ளதாகவே இருக்கிறது. இது நமக்குப் பயன்தரும்படி முன்னதாகவே எழுதப்பட்டது என்று பவுல் வலியுறுத்தினார்: "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமை யினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது" (ரோமர் 15:4). பழைய ஏற்பாடு, நாம் கற்றுக்கொள்ளக்கூடிய உதாரணங்களைக் கொண்டுள்ளது என்று அவர் கூறினார்: "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; ... நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 10:11).*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் பழைய ஏற்பாட்டில் நன்கு பழக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டியது ஏன் என்பதற்குக் குறைந்த பட்சம் ஆறு காரணங்கள் உள்ளன:*

*1. அண்டம் மற்றும் மனிதனின் தோற்றம் பற்றிய கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்கு.*

*2. இயேசுவின் தெய்வீகத்துவத்தை நிரூபிப்பதற்கு.*

*3. இயேசு மற்றும் கிறிஸ்தவத்தின் முன்நிழலின் வகைகளைப் படிப்ப தற்கு.*

*4. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளுக்கு இடையிலான ஒற்றுமைகளைக் கவனிப்பதற்கு.*

*5. பழைய ஏற்பாட்டு போதனைகளைப் புதிய ஏற்பாட்டுப் போதனை களுடன் நேரெதிராய் ஒப்பிடுவதற்கு.*

*6. கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமை ஆகியவற்றின் உதாரணங்களை பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கு.*

*இந்தப் பாடங்களின் முழு மதிப்பையும் நீங்கள் பெற்றுக் கொள்வதற்கு, உங்களுக்கு உதவுவதற்காக நீங்கள் பின்வருபவற்றைச் செய்ய விரும்பலாம்:*

*(1) இந்தப் பாடங்களில் உள்ள கருத்துக்கள் பற்றி ஒரு குறிப்புப்புத்தகம் தயாரியுங்கள், மற்றும் (2) இந்தப் பாடங்களைக் கவனமாய்ப் படியுங்கள். உலகத்திலேயே மாபெரும் புத்தகத்தை நாம் ஒன்றாக ஆராய்ந்து பார்க்கப்போகும் இந்த ஆண்டு நமக்கு ஒரு மன எழுச்சிமிகுந்த ஆண்டாக இருக்கப்போகிறது!*